உ

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்தர்

அருளிய

திருஎழுகூற்றிருக்கை

திருக்கயிலாய யாத்திரை

06-06-2004 முதல் 25-06-2004

அன்பளிப்புச் செய்பவர்கள்

எல்.கே. முத்து - எம். விசாலாட்சி

என். வீரப்பன்

வெளியீடு நாள்

01-08-2004

திருக்கயிலை சென்று திரும்பிய மாப்புனிதர்கள்



எல். கே. முத்து



மு. விசாலாட்சி



என். வீரப்பன்


திருக்கயிலாய காட்சி
காவாய் கனகத்திரளே போற்றி!
கயிலை மலையானே போற்றி போற்றி!

சிவ சிவ

முன்னுரை

சித்தாந்த சரபம், பேராசிரியர், முனைவர் வை.இரத்தினசபாபதி

"திருநெறிய தமிழ்" என்பது திருநின்ற செம்மை எனப் பெறும் சிவானந்தப் பெரும் பேரனுபவத்தை நெறிப்படுத்தி அமைக்கப் பெற்ற மொழி எனவே பொருள்படும்.

ஞானவாரமுதமுண்ட பிள்ளை முதலாகத் திருவருள் மொழித் தேவர் எனப்பெறும் சேக்கிழார் ஈறாக உள்ள அருளாசிரியர்களெல்லாம் இறைபரம் பொருளைத் துய்த்து உணர்ந்து, அவ்வனுபவத்தில் தெளிந்து நின்று, அவ்வனு பவத்தையே, அத்திருவருள் இயக்கம் காரணமாகத் திருநெறிய தமிழாக வெளிப்படுத்தியருளியவர்கள் ஆதலின், அவர்கள் கூற்றில் வெளிப்பட்ட "தமிழ்" என்ற சொல்லானது விரிந்த பொருளுடையதாகி, நிறைபேரின்பம் பரம்பொருளை - சிவத்தை, துய்த்துத் துய்த்து, அத்துய்ப்பில் பொங்கியெழுந்து பூரித்த நிறை பேரின்பமே திருநெறிய தமிழ் என்று கொள்ளுதல் வேண்டும்.

திருநெறிய தமிழ் மரபைத் தொடக்கி வைத்தவர் காரைக்காலம்மையாரே ஆயினும், ஞானவாரமுதமுண்ட பிள்ளையார் தம் திருவாக்கினை முதன்மையாகக் கொண்டு திருநெறிய தமிழ் தொகுக்கப் பெறலாயிற்று.

திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய மூன்று திருமுறைகளில், முதல் திருமுறையில் 128 ஆவது பதிகமாக

அமைந்த பெருமையுடையது திருஎழுகூற்று இருக்கை எனப் பெரும் பதிகமாகும்.

திருஞான சம்பந்தரின் தந்தையார் சிவபாத இருதயர், தம்முடைய திருமகனார் அருளிய பதிகங்களையெல்லாம் படித்து முடித்தபின் உணவுகொள்ளும் வழக்கமுடையவராக இருந்தார். திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் பெருகப் பெருக, ஒரே நாளில் அவைகளைப் பாராயணம் செய்ய இயலாமல் பல நாள் நீடித்தன. ஆதலின் பல நாள் உண்ணாமலேயே கழிந்தன. இதனை உணர்ந்த திருஞானசம்பந்தப் பெருமான், "தாம் இதுவரை அருளிய பதிகங்களையும் இப்போது அருளும் பதிகத்தையும் இனித் தம்மால் வெளிப்படுத்த இருக்கும் பதிகங்களையும் படித்துப் பயன்பெற விரும்புகிறவர்கள் இந்த ஒரு பதிகத்தைப் படித்தாலே பெறலாம்" என்ற அடிப்படையில் அருளிச் செய்த பதிகமே திருஎழு கூற்றருக்கை.

நம்முடைய சூழல் சிவபாத இருதயரைப் போன்றதன்று. திருஞானசம்பந்தப் பெருமானார் அருளிய பல பதிகங்கள் கிடைக்கப் பெறவில்லை. அவைகளைப் படித்துப் பயன்பெறும் வாய்ப்பே நமக்கு இல்லை. கிடைக்கும் பதிகங்கள் கிடைக்கலாகாப் பதிகங்கள் ஆகிய அனைத்தையும் படித்த பயனை இந்த ஒரு பதிகத்தைப் படித்தாலே அடையலாம் என்பதே நமக்கு மகிழ்வைத் தருகிறது.

'திரு எழுக்கூற்றிருக்கை'யின் மெய்ப்பொருள் விளக்கம் தனியே எழுதப் பெற்றுள்ளது. இப்பதிகம் பலமுறை பதிப்பாகி வெளியிடப் பெற்றிருந்தாலும் இப்போது வெளியிடப் பெறுவதில்

ஒரு புதுமை உண்டு.

சைவப் பெருமக்களுக்குப் பஞ்சபூதத்தலம், அட்டவீரட்டத் தலம், சோதிலிங்கத்தலம் எனப் பல்வேறு வகையான வழிபாட்டுத் தலங்கள் இருந்தாலும், அவையனைத்தையும் தன்னுள் அடக்கி உயர்ந்ததாய் அனைத்துப் பெருமக்களுக்கும் நேரிற் சென்று கண்டு வழிபடும் பெரும்பேறு எளிதிற் கிட்டப் பெறாததாய், சிவன் எனும் செந்தமிழ்ப் பெருமானை பொன்மேனி வண்ணத்துப் பூந்துருத்திப் பெருமானைத் தானே முன்னின்று எடுத்து நிறுத்திக் காட்டும் பெருமையுடையதாய் வெம்மையும், தன்மையும் உடனுறையும் நீரூற்றுகளின் மூலம் இறைவனையும், இறைவியையும் ஒருங்குணர்த்தும் வண்மை உடையதாய் அமைந்த **திருக்கயிலைச்** சென்று, கண்டு, அப்பேரின்பத்தை நுகர்ந்து, இங்கு எழுந்தருளிய திருக்கயிலை மாப்புனிதர் மூவரின் திருக்கயிலைக்குச் சென்று வந்த நிகழ்வை ஒட்டி வெளியிடப் பெறுவதால் இப்பதிப்பானது கயிலை மலையானைத் தர்ப்பணம் போல் காட்டும் தன்மையும், பெருமையும் தளாண்மையும் உடையதாக மலர்கிறது.

செந்தமிழ் வளர்ப்பின் தன்மைசால் வளமைகள் கெழுமிய தமிழகத்திலிருந்து திருக்கயிலை சென்று திருவருளும் குருவருளும் மாந்தி மகிழ்ந்து திரும்ப மனம் இன்றி, நம் போன்றவர்களுக்கெல்லாம் திருக்கயிலைத் தினமும் செந்தமிழ்த் திருவருட் பிரசாதமும் வழங்குவான் வேண்டி, மும்மலவசத்தால் முறைதவறித் தத்தளிக்கும் நம்போன்றவர்களையும் உய்விப்பான் வேண்டி, திருவருட் பிரசாதத்துடன் ஈண்டு எழுந்தருள் நின்ற பெருமை சான்ற திருக்கயிலைத் தண்ணனியர் மூவர் அவர்களை

நாம் '**திருக்கயிலை மாப்புனிதர்**' என்று வாழ்த்திக் கூறி வரம் பெறு பிரசாதம் பெற்று உய்வோமாக.

வணிக வளத்துக்கு மட்டுமேயன்றி, கடல் கடந்து சென்று சைவத்தையும், தமிழையும் வளர்த்த பெருமையும், மீண்டும் தாயகம் திரும்பியும் தாயத்தில் சைவத்தையும், தமிழையும் தொய்வுறாது வளர்த்த பெருமையும் செட்டிநாட்டுச் செட்டியார் மரபினருக்கு உண்டு.

அவ்வகையில், செட்டிநாட்டுக் கொத்தமங்கலத்தைக் குடியிருப்பாகக் கொண்ட திருமிகு. எல்.கே. முத்துச் செட்டியார் அவர்கள், இந்தியன் வங்கியின் மேன்மை மேலாளராகப் பெரும் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். 1972-ல் யான் சங்கரன்கோவிலில் சைவசித்தாந்தச் சொற்பொழிவாற்றியபோது அந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய பேறாளர் தற்போது திருமுறைமுற்றோதல் அறக்கட்டளையின் தலைமைப் பொறுப்பேற்று, அவ்வறக் கட்டளையின் செயன்மைப்பாடுகளைச் செவ்வனே நடத்திவரும் பேறாளர், திருமுறைப் பதிகங்கள் பயவற்றையும், மனம் செய்தும் ஓதியும் உணர்ந்தும் வரும் திருமுறைச் செல்வராகவும் திருமுறைக் காவலராகவும் விளங்கிவரும் செழுந்தமிழ்த் திருமுறைச் செல்வராக விளங்கிவரும் பெருந்தகைமை சான்ற திருமிகு.எல்.கே. முத்துச் செட்டியார் அவர்களும்,

செட்டிநாட்டு வணிகக்குல மக்களின் மாண்புக்கும், இல்லற நெறிக்கும் எடுத்துக்காட்டாக விளங்கித் தற்காத்துத் தற்கொண்டான் பேணித்தகை சான்ற சொற்காத்துச் சோர் விலராயும் திருமுறைத் தெளிவுறு நெறியில் இல்லறம் பேணும்

எழிலரசி, செட்டிநகர வாழ்வரசி அம்மையார், திருமிகு.எல்.கே.எம். அவர்களின் வாழ்வியல் நல்லறம் பேணும் துணைவியார் திருமதி. விசாலாட்சி ஆச்சியும்,

செட்டிநாட்டு அரியக்குடியை வாழ்விடமாகக் கொண்டவரும், பொறியாளர் கல்வியில் தகைமைசான்று, இந்திய நடுவண் அரசின் பொதுப்பணித் துறையின் நிர்வாக மேற்பார்வைப் பொறியாளராகப் பெரும் பொறுப்பில் தமக்கேயுரிய நிர்வாகத் திறமையால் அனைவராலும் மதிக்கப் பெற்றவரும் எளிமையும் இனிமையும் அன்பகந் தவறா ஆர்வமும், சிவபூசைச் செல்வரும் ஆகிய பேறாயிர் நா. வீரப்பச் செட்டியார் அவர்களும் என்ற,

மூவரும் இணைந்து மூவர் தமிழாய முழுமை பெற்றுத் திகழும் முதன்மைசால் திருக்கயிலைத் தவப்பயணத்தை 06-06-2004ல் தொடங்கி, 25-06-2004ல் நிறைவு செய்து தாயகம் திரும்பி தாம் வியப்புற்ற கயிலைசார் தவமுனியாம் சிவபிரானும் செல்வச் செழும்புதையல் தந்த ஆராவமுதெனும் அரும்பெரும் அருளியற் பேரின்பத்தை அனைவருக்கும் ஆக்கித் தந்து பேரா இன்பப் பெருவாழ்வில் நம்மையெல்லாம் திளைக்குமாறு செய்து நல்லறம் பேணினார்கள்.

திருவாளர்கள் எல்.கே. முத்துச் செட்டியார், திருமதி எல்.கே.எம். விசாலாட்சி ஆச்சி, திருவாளர் நா. வீரப்பச் செட்டியார் ஆகிய திருமுறை மும்மணிகரும் இத்திருக்கயிலைத் திருத்தலப் பயணத்தைத் திருவும் தெளிவும் பெற அமைத்துத் தந்த செழுமைச் செயலின் காரணமாகத்

திருக்கயிலை மாப்புனிதர் என்ற பெருநலம் பேணிச் சிறந்திருக்கியுள்ளார்கள். மூவர் பெருந்தகையரின் திருக்கயிலைத் திருத்தவப் பயணத்தின் நிறைவின் நினைவாக இந்நூல் 01-08-04 அன்று திருமுறை முற்றோதல் அறக்கட்டளையின் சார்பில் நிகழும் அப்பாடிகளின் நாலாந்திருமுறைச் சிந்தனை நிகழ்வில் வெளியிடப் பெறுகிறது.

அன்பர்கள் அனைவரும் திருஎழு கூற்றிருத் திருப்பதி கத்தைப் படித்து இன்புறுவதோடு ஓதியும் உணர்ந்தும் தெளிவு பெற்றுப் பேரா இயற்கைப் பெருவாழ்வுக்கெனத் தம்மை ஏற்புடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுவது கடமையாகும்

வாழ்க திருமுறை வாழ்வியற் பெருநெறி
வளர்க திருநெறிய செல்வராம் நற்பேறு.

உ

திருச்சிற்றம்பலம்

திருஎழுகூற்றிருக்கை

(மெய்ப்பொருள் விளக்கம்)

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

- மணிக்கவாசகர்

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

- திருஞானசம்பந்தர்

திருஞான சம்பந்தப் பெருமானார் அருளிய திருமுறைகள் மூன்றனுள், முதலாந் திருமுறையானது 136 பதிகங்களைக் கொண்டு விளங்குகின்றது.

'ஓம்' எனப்பெறும் முதன்மைப் பிரணவ மூல ஓசையனு பவத்தில் 'அ' கார ஓசை அனுபவமாக மிளிர்ந்தது முதல் திருமுறை; 'ம' கார ஓசை அனுபவமாக மலர்ந்தது இரண்டாந் திருமுறை 'உ' கார ஓசை அனுபவமாக மலர்ந்தது மூன்றாவது திருமுறை.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே"

என்பது அப்பாடிகள் திருவாக்கு. அருளியலனுபவ மெய்ம் மொழியை நுகர்ந்து இன்புற்று, அவ்வாறு இன்புற்ற அனுபவம் மொழியப் பெறும் போது அது 'ஓசை' எனப்பெறும் பெருமை படைக்கிறது.

திருமுறைகளெல்லாம் அருளியலனுபவ மெய்ம்மொழி விளக்கங்களாக அமைந்தமையின் 'ஓசை' ஆயின. ஆடுங் கூத்தப் பெருமானின் தூக்கிய திருவடியில் சிலம்பாக அமைந்து அருளனுபவம் கைகூடுவதற்கு வெளிப்படுத்தப் பெறும் இறையருள் மெய்ம்மொழியே 'ஓசை'.

திருச்**சிலம்பு ஓசை** வழியே சென்று
நிருத்தனைக் கும்பிடு என்று உந்தீபற
நேர்பட அங்கே நின்று உந்தீபற

என்பது திருவுந்தியார்த் தாழிசை (17). ஊன்றிய மலர்ப்பதத்தின் சிலம்பிலிருந்து எழுவது ஒலி. அது ஞானப் பெரும்பேற்றைத் தரும்.

'ஓ' செய்தல்; ஓ செய்; ஓசை என்றாயின. ஏனைய எல்லாம் ஒலிகளாயின.

அகரமும் உகரமும் முறையே பரம் பொருளையும் திருவருளையும் குறிக்கும் மந்திர அனுபவ அலகுகள். இடைநின்ற 'ம'கரம் ஆன்மநிலையையும் அதன் அருளியலனுபவத்தையும் இணைத்துக் கூறும் மெய்ம்மொழிப்பதம்.

அகரம் என நின்ற பரம் பொருளை உகரம் எனப்பெறும் திருவருளால் துய்த்து நின்ற மகரமாகிய ஆன்மாவானது அவ்வனுபவ நிலையை மொழிகளால் வெளிப்படுத்தியபோது முதல் திருமுறை மலர்ந்தது.

உகரம் எனப்பெறும் திருவளாற்றலை அகரம் எனநின்ற பரம் பொருளால் துய்த்து நின்ற மகரமாகிய ஆன்மாவானது

அவ்வனுபவ நிலையை மொழிகளால் வெளிப்படுத்தியபோது மூன்றாந் திருமுறை மலர்ந்தது.

ஆன்மப் பதமாகிய மகரம் இடைநின்று அகரமும் உகரமும் ஆகிய இரண்டன் அனுபவத்தைப் பெற்று நின்ற நிலையில் வெளிப்படுத்தப் பெற்றது இரண்டாந் திருமுறை.

பண் வரிசையில் திருமுறைகள் தொகுக்கப் பெற்றன என்ற கருத்தை இந்த விளக்கம் மறுப்பதாகாது. அது ஒலிமுறை. இது ஓசை முறை.

அகார வாச்சியப் பொருளாம் பரம் பொருளை உகாரமாகிய திருவருள் துணைக் கொண்டு துய்த்த நிலையில் மகாரமாகிய ஆன்மா வெளிப்படுத்திய திருவருள் மெய்ம்மொழி அனுபவப் பெரும் பேறாக மலர்ந்த **138** ஓசைப் பதிகங்களில் **128** ஆவதாக மலர்ந்த பதிகமே **"திருஎழுகூற்றிருக்கை".**

திருஞான சம்பந்தப் பெருமானார் தாம் இருந்து பெற்ற திருவருளியலனுபவத்தால் அகார வாச்சியப் பொருளாகிய பரம் பொருளைத் துய்த்துணர்ந்த நிலையைத் திருஎழு கூற்றிருக்கையின் இறுதியில்

"கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை"

என எடுத்துக்காட்டி, அவ்வகையில் நின்று நின்னைத் துய்த்துணர்ந்து மொழிகுநர் இந்த நீணிலத்தில் இல்லை என எடுத்துக் காட்டி, முடிந்த பொருளாக இப்பதிகம் கழுமல முதுபதிக் கவுணியன் அருளிய **"கட்டுரை"** என்று திருவாய் மலர்ந்தருளினார்.

138 பதிகங்களைக் கொண்ட முதல் திருமுறையில் **128** ஆவது பதிகமாக மலர்ந்தது திருவெழுகூற்றிருக்கை. **47** வரிகளைக் கொண்டு விளங்குகின்ற இப்பாடல் ஒரு பதிகமாகவே வைத்து எண்ணப்பெறும் பெருமையுடையதாகிறது.

திருஞானசம்பந்தப் பெருமானார், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் அருளிச் செய்த திருமுறைகள் பொதுவாகத் **தேவாரம்** என்ற பெயரால் குறிப்பிடப் பெறுமாயினும் திருஞானசம்பந்தர் பாடியவை **திருக்கடைக்காப்பு** என்ற பெயராலும், திருநாவுக்கரசர் பாடியவை **தேவாரம்** என்ற பெயராலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியவை **திருப்பாட்டு** என்ற பெயராலும் குறிப்பிடப் பெறும்.

திருஞானசம்பந்தர் அருளியவை **திருக்கடைக்காப்பு** என வழங்கப் பெறுவதற்கு ஒரு காரணம் உண்டு. திருஞான சம்பந்தரின் பதிகங்கள் பெரும்பாலும் பதினொரு பாடல்களால் ஆக்கப் பெற்றிருக்கும். பதினொராவது பாடலில் பாடிய தன்னுடைய பெயரையும், தான் எத்தகைய அருளியலனுபவத்தில் நின்று பாடினேன் என்பதையும் யாரைப் பற்றிப் பாடினேன் என்பதையும் இப்பதிகத்தை எப்படிப் படிக்க வேண்டும் என்பதையும் அப்படிப் படித்தால் என்ன பயன் கிடைக்கும் என்பதையும் எடுத்துக் காட்டி அமைப்பது திருஞான சம்பந்தரின் பதிக அமைப்பு முறை. கடைசிப் பாடலில் இவ்வளவு செய்திகளையும் கூறி முடித்துக் காட்டியிருப்பதால் திருஞானசம்பந்தரின் பதிகங்கள் "**திருக்கடைக் காப்பு**" என்ற பெயரால் அழைக்கப் பெறுகின்றன.

அவ்வகையில் திருவெழுகூற்றிருக்கைப் பதிகத்திலும் மேலே எடுத்துக் காட்டப் பெற்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இப்பதிகத்தில் திருஞான சம்பந்தப் பெருமான் தன்னை,

'இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன்'

என்று விளக்கப்படுத்திக் காட்டினார்.

'மறு இலா மறை' என்பது குற்றமற்ற மகாவாக்கியம் என்ற பொருளைத் தந்தது.

'குற்றமற்ற மறை' என்ற தொடரால் திருஞான சம்பந்தர் குறிப்பிடுவது **"இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்"** என்ற தொடரைத்தான்.

மறு இலா மறை எனப்பெறும் இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும் என்ற தொடர்ப் பொருளை அருளியலனுபவத்தால் துய்த்து நின்று ஓர்ந்து உணரும் தன்மையுடைய கவுணியன் என்று தம்மை-தம் அனுபவ நிலையை உணர்த்தினார் திருஞான சம்பந்தர்.

"இருமையின் ஒருமையின்
ஒருமையின் பெருமையும்"

என்ற தொடரானது பரம்பொருளின் உண்மை இலக்கணத்தை அருளியலனுபவத்தால் ஓர்ந்து உணர்ந்து வரையறைப்படுத்திக் கூறிய மரவு முறையாகும்.

இருமை - இருவேறுபட்ட நிலைமை. இருவேறுபட்ட நிலைமைகளின் இடையில் நிற்பதாய் இருவேறுபட்ட நிலைகளைக் கடந்ததாய் அமைந்த முழுமைநிலை ஒன்று உண்டு. அதுவே ஒருமைநிலை. அதுவே கடந்த நிலைப் பரம்பொருளின் உண்மை நிலை.

ஆன்ம அனுபவம் இருமைநிலையில் விளங்குவது. நன்மை தீமை; புண்ணியம் பாவம், பகல் இரவு, இன்பம் துன்பம்; மெய் பொய்; இறத்தல் பிறத்தல்; ஆண்மை பெண்மை. இவ்வாறு உலகியல் அனுபவப் பொருள் எல்லாமே இருவகையில் நின்று அனுபவப்படும்.

இருமைநிலையில் அனுபவப்படும் எல்லாமே மெய்மைப் பொருள்கள் தாம். ஆனால் அவைகளைக் கடந்ததாய் நின்ற ஒருமைப் பொருளே சத்தியப் பொருளாகிய உண்மைநிலைப் பரம்பொருள்.

முன்னர் நின்ற இருமை நிலை மெய்மைப் பொருளாக இருந்தாலும் மாறுபாடுகளுக்கு உட்பட்டவை. இருமையைக் கடந்தே பொருளே என்றும் மாறாத சத்தியப் பொருள். அதுவே பரம் பொருள் நிலை.

இருமை நிலைகளைக் கடந்தததாயினும் அப்பொருள் இருமையின் இடையில் தான் வெளிப்படும். எனினும் அது இருமையைக் கடந்தது என்று கொள்ள வேண்டும்.

இதற்கு அர்த்தநாரீசுர மூர்த்தத்தை எடுத்துக் காட்டுவதுண்டு. அது பொருந்தாது. அர்த்தநாரீசுர மூர்த்தம்

இருமை கலந்த ஒருமை நிலை. ஆனால் பரம்பொருள் நிலை என்பது இருமையின் இடையில் காணப் பெறுவதாய் இருமைகளைக் கடந்ததாக அமைவது என்ற பொருளில்

இருமையின் ஒருமையும்
ஒருமையின் பெருமையும்

என்ற 'மறை'யை ஓர்ந்து உணர்தல் வேண்டும்.

இக்கருத்தானது சேக்கிழார் பெருமானால் பன்னிரண்டாந் திருமுறையில் அடியார் பெருமையை விளக்குமிடத்தில் குறிக்கப் பெற்றுள்ளது.

"பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரை நீ அடைவாய் என்றார்"

என்ற பெரிய புராணப் பாடலில் **(342)** தெளிவாகக் குறிப்பிட்டு அருளுகின்றார்.

"இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்" என்பதை மகாவாக்கியமாகக் கொண்டு, மறையெனக் கொண்டு ஓர்ந்து உணர்ந்த நிலையில் இறைமை இலக்கணங்கள் இருபத்து நான்கினைச் செயல்முறைப்படுத்திக் காட்டுகின்றார்.

சீகாழித் தலப் பெயர்களாகப் பன்னிரண்டு பண்புகளைத் தடத்த இலக்கணங்களாக - சார்பு இலக்கணங்களாக அமைத்துக் காட்டும் திருஞானசம்பந்தர் "ஒருருவாயினை" என்றாற் போலப் பன்னிரண்டு முதன்மை இலக்கணங்களையும் எடுத்துக் காட்டி முடிக்கின்றார்.

சீகாழியானது பன்னிரண்டு முறை கடலில் மிதந்த ஊர். கடலால் கொள்ளப்பட்ட போதெல்லாம் சீகாழியானது அழியாது மிதந்த பெருமையுடையது என்றும் ஒவ்வொரு முறையும் இறைவனும் இறைவியும் திருக்கயிலையிலிருந்து வந்து சீகாழிப் பதியைப் புகலிடமாகக் கொண்டனர் என்றும் நம்பியாண்டார் நம்பிகள் தம்முடைய நூல்களில் விளக்கிக் காட்டியுள்ளார்.

ஒவ்வொருமுறை கடலில் மிதந்த போதும் பிரமபுரம், வேணுபுரம் போலப் பன்னிரண்டு பெயர்களைக் கொண்டு விளங்கிய பெருமை காழிப்பதிக்கு உண்டு. அப்பன்னிரண்டு பெயர்களையும் முறையாகக் கூறி வணங்கினாலே பெரும் பயன் பெறலாம் என்று கொள்வது சைவ மரபு.

> "**பிரமபுரம் வேணுபுரம்** புகலி பெரு**வெங்குரு**நீர்ப்
> பொருவில் **திருத்தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்** முன்
> **வருபுறவம் சண்பைநகர்** வளர்காழி **கொச்சைவயம்**
> பரவு **திருக்கழுமலமாம்** பன்னிரண்டு திருப் பெயர்த்தால்"

என்பது பெரியபுராணம் **1917** ஆம் திருப்பாட்டு.

ஒருரவாயினை, மும்மூர்த்திகளாயினை, ஒருவன் ஆகிநின்றனை, ஒளிநெறிகாட்டினை; நாட்டம் மூன்றாகக்

கோட்டினை, சூடினை, ஏந்தினை, ஈடு அழித்து உரித்தனை, அவுணரை அறுத்தனை, வானோர் ஏத்த நின்றனை, விரல் கெடுத்து அழித்தனை, பண்பொடு நின்றனை என்ற பன்னிரண்டும் பரம்பொருளின் முதல்நிலை இலக்கணங்கள்.

பிரமபுரம் பேணினை, வேணுபுரம் விரும்பினை, புகலி அமர்ந்தனை, வெங்குரு விளங்கினை, தோணிபுரத்து உறைந்தனை, பூந்தராய் ஏய்ந்தனை, சிரபுரத்து உறைந்தனை, புறவம் புரிந்தனை, சண்பை அமர்ந்தனை, காழி அமர்ந்தனை, கொச்சையை மெச்சினை, கழுமல முதுபதியில் மூன்று காலமும் தோன்ற நின்றனை என்ற பன்னிரண்டு இலக்கணங்களும் தலப்பெயரோடு இணைந்த நிலையில் அமைந்த பரம்பொருளின் சார்பு இலக்கணங்கள்.

முதன்மை இலக்கணங்கள் பன்னிரண்டும் ஒரு பக்கமாக, சார்பு இலக்கணங்கள் பன்னிரண்டும் மறுபக்கமாக அமைய - இவ்வகை இருமை நிலைகளைக் கடந்த வகையில் உணரப் பெறுவதே பரம் பொருள் என்று சுட்டிக் காட்டினார்.

கடந்த நிலைப் பரம் பொருளனுபவம் பெறுவதற்கு இவ்விரு வகை இலக்கணங்களும் தேவையே. ஆனால் அவைகளே முற்ற முடிந்த இலக்கணங்களல்ல. இவ்வகை இருமை இலக்கணங் களைக் கடந்ததாய் நின்ற ஒருமை நிலையே பரம்பொருளின் உண்மை நிலை என்று உள்ளத்துக் கொண்டு ஓர்ந்து உணர முற்பட்டால் அப்பரம் பொருள் - அப்பாலைக்கு அப்பாலாய் நின்ற பரம் பொருள் அனுபவப்படும் என்பதே "இருமையின் ஒருமை, ஒருமையின் பெருமை" என்ற மகாவாக்கிய அனுபவப் பொருள்.

'இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்' என்ற மறைமொழித் தொடரின் விளக்கமே சைவ சித்தாந்தம் கொள்ளும் **"சுத்தாத்வைதம்"** ஆகும். ஒன்றாய், வேறாய், உடனாய் இருக்கும் உறவுமுறையை விளக்கும் வகையில் எடுத்துக் காட்டிய திருவருள் மெய்ம்மொழித் தொடரே "இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்" என்பது.

திருஞான சம்பந்தப் பெருமானார் அருளிய முதல் திருமுறை பதினொன்றாம் பதிகமாகிய திருவீழி மிழலைத் திருப்பதிகத்தின் இரண்டாம் பாடலில் அவரால் குறிப்பிடப் பெறும் சுத்தாத்வைத இலக்கணத்தை இங்கே நாம் இணைத்துக் காணுதல் வேண்டும்.

"ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண் ஆண் குணம் மூன்றாய்
மாறா மறைநான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறுஆர்சுவை ஏழ் ஓசையோடு எட்டுத் திசைதானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே"

என்ற பாடலில் வரும் செய்தியை ஊன்றிக் கணித்தல் வேண்டும்.

இனி, 'திருஎழுகூற்றிருக்கை' என்ற தலைப்பைப் பற்றிய மெய்ப்பொருள் விளக்கத்தைச் சிந்தித்துணரலாம்.

'திருஎழுகூற்றிருக்கை' என்பது ஒன்று முதல் ஏழுவரை உள்ள எண்களின் அடிப்படையில், எண்களைப் பயன்படுத்தும் முறையில் அமைக்கப் பெறும் ஒருவகை இலக்கியஉத்தி. இதுவே இலக்கிய ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டும் விளக்கம்.

"வாக்கின் மன்னரை வழியனுப்பியபின் காழித் திருஞான சம்பந்தப் பிள்ளையார் மீண்டும் சீகாழியிற் புகுந்து வேதவடிவாகிய திருத்தோணியில் வீற்றிருந்த விண்ணவர் பெருமானைப் பாடிப் பணிந்து அங்கு எழுந்தருளியிருக்கின்ற நாளில் செந்தமிழ்ப் பாமாலையின் விகற்பங்களாகிய மொழிமாற்று, மாலைமாற்று, திருவியமகயம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை முதலானவற்றை அருளிச் செய்து, திருப்பாணனாரும் இசைவடிவான மதங்க சூளாமணியாரும் இப்பதிகங்களை ஏழிசை பற்றிப் பாடச் சீகாழியில் எழுந்தருளியிருந்தார்கள்."

என்பது முதல் திருமுறை, 117 ஆம் பதிக முன்னுரையில் காணப்பெறும் வரலாறு. தருமையாதீனப் பதிப்பு முதல் திருமுறை (1953) பக்கம் 497.

'திருஎழுகூற்றிருக்கை' என்ற பெயரில் அமைந்த பதிகம் பிரமபுரப் பதிகம் என்று கொள்ளப் பெறுவதாகும்.

இப்பதிகத்தினுள் 'ஏழு' என்ற சொல் இரண்டு முறை எடுத்தாளப் பெற்றுள்ளது. எழுவான் தனை வளர்க்கும் பிரமபுரம் எனவும் "எச்சன் ஏழிசையோன் கொச்சை" எனவும் இரண்டு இடங்களில் மட்டுமே 'ஏழ்' என்ற சொல்லைக் காண முடிகிறது.

'திருஎழுகூற்றிருக்கை' என்பதைக் கீழ்க் கண்டவாறு பிரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

த்+இரு+எழு+கூற்று+இருக்கை எனப் பிரித்தல் வேண்டும்.

'த்' எனப்பெறும் தகரநிலையில் இருத்தல் என்ற பொருளைத் தரும் சொல்லாகத் 'திரு' என்பதைக் கொள்ளுதல் வேண்டும்.

'த்' என்பது மெய்யெழுத்து வரிசையில் ஏழாவது எழுத்து 'த்' எனப்பெறும் ஏழாம் நிலையாகிய அருள்நிலை அனுபவத்தில்; இருத்தல் - ஆன்மாவானது தங்கி ஞானநிலையின் அனுபவம் பெறதல். இதனைத் 'தகராலய ரகசியம்' என்று குறிப்பிட்டு விளக்குவார் பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள்.

தகர அனுபவமாகிய ஏழாம் நிலை - அருள்நிலை அனுபவமே 'திரு' எனப்பெறும். அதனை நுகர்பவன் அல்லது ஆள்பவன் திருவாளன் எனப் பெறுவான்.

தகர அனுபவத்தில் அமிழ்வதாம் நிலையே தமிழ் (த்+அமிழ்) எனப்பெற்றது. பின்னர் அவ்வனுபவத்தைச் சொல்ல முற்படும் போது அச்சொல் 'தமிழ்' எனப்பெற்றது. பின்னர் அது இக்காலத்தே சாதாரண மொழிக்குப் பெயராக நின்றது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்றும்

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

என்றும் திருமூலர் அருளிச் செய்தவைகளைக் காண்க.

'திரு' எனப்பெறும் ஏழாவது கூறினுள் இருத்தல் என்பது திருவெழுகூற்றிருக்கை என்பதன் பொருள்.

ஆன்மாவானது மூலாதாரம் தொடங்கி ஆறு கூறுகளில் தங்கித் தங்கி மேலெழுந்து ஏழாம் நிலையாகிய அருள்நிலையில்

இருக்கை கொண்டு அனுபவித்து இருத்தல் என்பதே திரு எழுகூற்று இருக்கை என்பதன் பொருள். இருக்கை என்ற சொல்லானது இருத்தல் என்ற பொருளைத் தரும்.

'திரு' எனப்பெறும் ஏழாவது கூறாகிய அருளனுபவ நிலையில் அமர்ந்து இருத்தலையே காரைக்காலம்மையாரும்

"அறவா நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க"

வேண்டும் என்று வேண்டினார்.

"என்னையும் இருப்பதாக்கினன்"

என்று மணிவாசகப் பெருமானும் எடுத்துக் கூறி இன்புற்றனர்.

1. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறுநிலைகளையும் கடந்து அப்பால் அமைந்த ஏழாம் நிலையே அருள்நிலை.

2. சித்தாந்தம், வேதாந்தம், யோகாந்தம், கலாந்தம், போதாந்தம், நாதாந்தம் என்ற ஆறு நிலைகளையும் கடந்து அப்பாற்பட்ட அருள் நிலையாகிய ஏழாம் நிலையில் இருத்தல் என்றும் கொள்ளலாம்.

3. ஐந்து அறிவு நிலைகளையும், அவற்றிற்கு மேற்பட்ட ஆறாம் அறிவு நிலைகளையும் தன்னுள் அடக்கி உயர்ந்திருக்கும் உயர்நிலையும், முன்னர் உள்ள ஆறு அறிவு நிலைகளிலும்

நடுவாய் நின்றும் கடந்தும் இருக்கின்ற **'கந்து'** எனப்பெறும் ஏழாம் நிலையாகிய அருள்நிலையில் அமர்ந்து இருத்தல் என்றும் கொளளலாம்.

4. நிவர்த்தி, பிரதிட்டை, வித்யா, சாந்தி, சாந்தி அதீதம், சாந்தி அதீத உத்தரம் என்ற ஆறு கலைகளையும் கடந்து நின்ற ஏழாம் கலையாகிய அருளியல் அனுபவக் கலையில் இருந்து அருளனுபவம் பெறுதலே ஏழாம் நிலை இருக்கை அனுபவம் என்றும் கூறுவர்.

5. **"ஆறு ஆறையும நீத்து அதன் மேல்நிலையைப் பேறு ஆக அடியேன் பெறுமாறு உளதோ"**

என்று கூறியருளிய அருணகிரிநாதர் திருவாக்கினை நோக்கி உணர்க.

6. குருதுரியாதீதம், சுத்தசிவசாக்கிரம், சுத்தசிவ சொப்னம், சுத்தசிவ சுழுத்தி, சுத்தசிவ துரியம், சுத்தசிவ துரியாதீதம் என்ற ஆறுபடி நிலைகளைக் கடந்த பின்னர் எழும் அருளனுபவப் பெறும்பேற ஏழாம் நிலை.

இவைகளெல்லாம் அருளாளர்களால் உணர்த்துப் பெற்றவை எளிய நிலையில் ஏழாம் படிநிலை அனுபவத்தை நாம் வரையறுக்கலாம்.

உலகியல், நீதியியல், அறஇயல், அறிவியல், ஆன்ம இயல், மெய்ப்பொருளியல் ஆகிய ஆறு இயல்புகளையும் கடந்து ஏழாம் நிலையாகிய அருளியலில் இருத்தல் என்று கொள்ளலாம்.

காழிக்குள்ள பெயர்களுள் தலைமையாக நிற்பது பிரமபுரம்.

திருஎழுகூற்று இருக்கை அனுபவமே பிரமபுர அனுபவம்.

'பிரமபுரம்' முதலாகக் கழுமலம் இறுதியாகப் பன்னிரண்டு படிநிலைகள் உண்டு. அவைகள் பன்னிரண்டு பெயர்களாக அமைக்கப் பெற்றுள்ளன.

பன்னிரண்டாம் படியாக அமைந்துள்ள கழுமலம் என்பதே கீழ்ப்படி. அருளியனுபவத்துக்குச் செல்வதற்குரிய முதற்படி. 'பிரமபுரம்' என்பது அருளியலனுபவம் நிகழும் முடிநிலைப்படி.

'கழுமலம்' என்ற படியில் ஆன்மாவானது ஆணவ மலத்துடன் ஒன்றும் அறியாமற் கிடக்கப் பெறும் கேவலநிலையில் நிற்கிறது. கழுவப் பெறுவதற்குரிய - நீங்கப் பெறுவதற்குரிய ஆணவமலத்துள் அழுந்திக் கிடக்கும் ஆன்மாவின் நிலையே கழுமலம். இதுவே ஆன்மாவின் ஆன்மீகப் பயணத்தின் முதற்படி.

இரண்டாவது கொச்சைவயம். இது உடல் கிடைத்த சகல நிலை அனுபவத்தை அளிக்கும் இரண்டாம்படி.

மச்சகந்தம் பரவிய மாயா சம்பந்தமாக உடம்பை அருள் மணம் கமழும் சுத்த உடம்பாக மாற்றுதல் வேண்டும். இதுவே இரண்டாம் நிலை படியில் - கொச்சைவயத்தில் ஆன்மாவானது பெறும் அனுபவம்.

அடுத்த மூன்றாம்படி முதல் அமையும் பத்துப் படிகளில் தசகாரிய அனுபவம் முறையுறத் தொடங்குகிறது. அது காழி முதல் பிரமபுரம் வரை முறையே தொடர்ந்து நடைபெறும்.

காழி, சண்பை, புறவம் எனப்பெறும் (3, 4, 5) மூன்று படிகளில் முறையே தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்ற மூவகை அனுபவம் நிகழும். இம்மூன்றும் தத்துவம் பற்றிய அனுபவமாதலின் ஒரே படியாகக் கொள்ளப் பெற வேண்டும். இதுவே **தத்துவப்படி.**

சிரபுரம், பூந்தராய், தோணிபுரம் எனப்பெறும் (6, 7, 8) மூன்று படிகளில் ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி எனப் பெறும் மூன்று அனுபவம் நிகழும். இம்மூன்றும் ஆன்மாவைப் பற்றி அனுபவமாதலின் ஒரே படியாகக் கொள்ள வேண்டும். இதுவே **ஆன்மப்படி.**

அடுத்து, வெங்குரு எனப்பெரும் படியில் (9) சிவரூப அனுபவம் நிகழும். இது **சிவரூபப்படி.**

அதற்குமேல், புகலி எனப் பெறும் படியில் (10) சிவதரிசனம் அனுபவப் பெறும். இது **சிவதரிசனப்படி.**

இதற்குமேல் உள்ள வேணுபுரத்தில் சிவயோக அனுபவமும், அதற்கு மேல் உள்ள பிரமபுரத்தில் சிவபோக அனுபவமும் ஆன்மாவுக்கு நிகழும். இவ்விரண்டும் தனித்தனியே கூறப் பெற்றாலும் இரண்டும் ஒன்றே. இதுவே ஏழாம் படிநிலை **அருளனுபவம்**

முறைப்படுத்தி கூறினால்,

1. **கழுமலம்** என்பது ஆன்மாவின் கேவலநிலை அனுபவம்

2. **கொச்சைவயம்** என்பது ஆன்மாவின் சகநிலை அனுபவம்

3. **தத்துவப்படி** என்பது ஆன்மாவின் மூன்றாம் படிநிலை அனுபவம்.

4. **ஆன்மப்படி** என்பது ஆன்மாவின் தன்னுண்மை அனுபவப் படிநிலை அனுபவம்.

5. **சிவரூபம்**

6. **சிவதரிசனம்**

இவ்வாறு அமையப் பெற்ற ஆறுபடிநிலைகளைக் கடந்து அருளனுபவம் என்ற ஏழாம் படிநிலையில் ஆன்மா நின்று இன்பம் பெறும்.

அப்போது அது சிவயோகம், சிவபோகம் என இருவகை அனுபவம் பெறும். இவ்வனுபவம் 'இருக்கை' எனப்பெறும். இரு-இரண்டு; கை-ஒழுக்கம், இருவகை ஒழுக்கங்களை இணைத்த ஒருநிலை அனுபவம் என்பது இதன் பொருள்.

ஆன்மாவானது அருளியலனுபவத்தில் நிற்கும்போது இரண்டு அனுபவம் இணைந்த ஒரு பேரின்பம் ஆன்மாவுக்குத் தலைப்படும். அவைகளைச் சிவயோகம், சிவபோகம் எனக் கொள்ளல் வேண்டும். இரண்டு பக்கங்களைக் கொண்ட ஒருவாள் போல இவ்வனுபவம் நிகழும். இருமை இணைந்த ஒருமை அனுபவமே வேணுபுரமும், பிரமபுரும் எனப் பெற்றன.

எனவே திரு எனப்பெறும் ஏழாம்படியாகிய அருளனுபவப் படிநிலையில் நின்று சிவயோகம், சிவபோகம் எனப்பெறும் இருவகை ஒழுக்கங்களை (இருக்கை) ஒரு சேரத் துய்ப்பதை

எடுத்து விளங்கும் திருவருள் மெய்ம்மொழியே **திருஎழுகூற்று இருக்கை** என விளக்கம் கண்டு கொள்ளதல் வேண்டும்.

ஏழாம் நிலையாகிய அருளியலில் நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் துய்ப்பதாகிய நிலையை இப்பதிகம் அளிக்கும் என்பதே இப்பதிகப் பயன்.

(மேலும் விரிவு செய்யலாம். இப்போதைக்கு இவ்விடத்துக்கு இது அமையும் என்ற அளவில் நிறுத்தப் பெற்றது. அருளியலனுபவ நிலை என்பது எது என ஓரளவு அறியும் முறையில் இது அமைக்கப் பெற்றது.

அருளியல் அநுபவத்தில் நிற்பவர்களுக்கும் அருளியலனுபவப் படிநிலைகளை அளந்தறிய விரும்புவர்களுக்கும் மயக்க அனுபவத்தை அருளியலனுபவம் எனக் கொண்டு மருள்பவர்களுக்கும் தற்சோதனை செய்து கொள்ளும் வகையில் இவ்விளக்கம் பயன்பெறும். மற்றவர்கள் இதைப் படித்துவிட்டு, விளங்கவில்லை எனக் கருத வேண்டாம். இதை எழுதுவதால் என்ன பயன் என இழித்துரைக்க வேண்டாம்).

ஒன்று முதல் ஏழுவரை உள்ள எண்களைப் பயன்படுத்தி அமைக்கப் பெறுகின்ற இலக்கிய வகை என்ற அளவில் திரு எழுகூற்றிருக்கையை விளங்கிக் கொள்வதே அனைவருக்கும் எளிதில் விளக்கக் கூடிய விளக்கம்.

திருஎழுகூற்றிருக்கை என்பது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்ற எண்ணிக்கையில் தொடர்ந்து ஒருவகை ஏற்ற இறக்க முறையில் அமைக்கும் பாடல் முறை ஆகும். அதனைத்

தேர்போல ஒரு வடிவமைப்பில் அமைத்துக் காட்டுவதும் உண்டு.

காலத்தால் முற்பட்டது திருஞானசம்பந்தர் அருளிய திரு எழுகூற்றிருக்கை ஆகும். எனவே, திருஎழுகூற்றிருக்கை பற்றிய விளக்கத்தை அவர் அருளிய பதிகத்தின் மூலமாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

திருஞானசம்பந்தரின் திருஎழுகூற்றிருக்கையை அடிப்படையாகக் கொண்டு பல அருளாளர்கள் 'திருஎழுகூற்றிருக்கை'யை அமைத்துள்ளார்கள்.

ஏழு பிறவி உடையன உயிர்கள். ஏழு பிறவிகளைக் கொண்ட எல்லா உயிர்களும் உய்தி பெற அமைக்கப் பெற்ற பதிகமாகவும் அது அமைக்கப் பெறுகிறது.

திருஞானசம்பந்தர் 'திருஎழுகூற்றிருக்கை' யை அருளியதன் நோக்கம் என்ன என்பதும் மரவு வழியால் பேசப் பெற்று வருகிறது.

பதிகம் பாடுதல் திருஞானசம்பந்தர் மேற்கொண்ட சமுதாயத் தொண்டு. ஆனால், அவர் காலத்திலேயே அவர் அருளிய பதிகங்களைப் பாராயணம் செய்யும் மரபும் இருந்து வந்துள்ளது.

பதிகங்களைப் பாராயணம் செய்தல் என்ற தொண்டினை மேற்கொண்டிருந்தவர் திருஞான சம்பந்தரின் தந்தையாராகிய சிவபாத இருதயர் என்பதும் தெரிய வருகிறது. பதிகங்களைப் பாராயணம் செய்துவிட்டு உணவு உட்கொள்ளும் மரபைச் சிவபாத இருதயர் மேற்கொண்டிருந்தார். திருஞான சம்பந்தரின் பதிகங்கள் எண்ணிக்கையால் அதிகரித்தன. அவற்றையெல்லாம் ஓதிப்

பாராயணம் செய்துவிட்டு, பிறகு உணவு கொள்ளும் மரபைச் சிவபாத இருதயரால் கடைப்பிடிக்க இயலவில்லை. பலநாள் அவர் பட்டினி கிடக்க வேண்டியதாயிற்று.

இச்செய்தி தெரியவரவே, திருஞான சம்பந்தர் தாம் இதுவரை பாடிய பதிகங்களும் இப்போது பாடிக் கொண்டிருக்கும் பதிகங்களும் இனிப் பாடப் போகும் பதிகங்களும் ஆகியவைகளின் உட்கருத்தும் பயனும் அமையும் வகையில் இத் 'திருஎழுகூற்றிருக்கை' என்ற பதிகத்தை அருளிச் செய்தார் என்பது மரபின் வழி வந்த மாண்பு.

எனவே திருஞானசம்பந்தர் நேரம் கிடைத்தபோது அப்போது அமைந்த யாப்பமைதியில் பதிகம் பாடினார் என்று கொள்வதற்கு இல்லை.

பதிகம் அருளுவதற்குரிய அடிப்படைத்திட்டம், அமைக்க வேண்டிய முறை, சமுதாயத் தொண்டு ஆகியவைகளை இறையருள் துணைக் கூட்டத் தம் உள்ளத்தில் முன்னமேயே அமைத்துக் கொண்டு அந்த அடிப்படையில் அருளியல் அனுபவங்களை முறைமைப்படுத்திப் பாடி வந்தார் என்று கொள்ள வேண்டி இருக்கிறது.

திருஞானசம்பந்தர் அருளிய அனைத்துப் பதிகங்களையும் முறைப்படி ஓதினால் என்னென்ன பயன் கிடைக்குமோ அவ்வளவையும் **திருஎழுகூற்றிருக்கை என்ற ஒருபதிகத்தைப் படித்தாலே பெறலாம் என்பதும் திருஎழுகூற்றிருக்கைப் பதிகம் படித்துவிட்டாலே,**

திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்கள் அனைத்தையும் படித்ததாக அமையும் என்ற கருத்தையும் நாம் கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வாறே, அண்மைக் காலத்தில் நம்முடன் வாழ்ந்த அருளாளராகிய பாம்பன் சுவாமிகள் ஆறுமண்டலங்களாக 6666 பாடல்கள் அருளினார்கள். அவைகளையெல்லாம் அனைவராலும் முழுமையாகப் படிக்க இயலாது என்பதை அவர்களிடம் விண்ணப்பித்த போது மண்டலம் ஒன்றுக்கு ஒருபாடலாக ஆறு பாடல்களைக் குறிப்பிட்டுக் கொடுத்துள்ளார்கள். அந்த ஆறுபாடல்களைப் படித்துப் பாராயணம் செய்தாலே 6666 பாடல்களையும் படித்த நிலை அமையும் என்ற குறிப்பையும் உணர வைத்தார்கள் பாம்பன் சுவாமிகள்.

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த

திருஎழுகூற்றிருக்கை

பண் - வியாழக் குறிஞ்சி

முதல் திருமுறை : பதிகம் **128**

ஓர் உருவாயினை மான் ஆங்காரத்து
ஈர் இயல்பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவனாகி நின்றனை
ஓர் ஆல்நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை; நாட்ட மூன்றாகக் கோட்டினை;
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை;
ஒருதாள் ஈர் அயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை; காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை;
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தொடு நால்நிலம் அஞ்சக்
கொன்று தலத்தறு அவுணரை அறுத்தனை;
ஐம்புலன் நாலாம் அந்தக்காரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை; ஒருங்கிய மனத்தோடு

இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதல் எழுத்து ஓதி
வரன்முறை பயின்று எழுவான் தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை;
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை;
இகலிய மைந்துணர் புகலி அமர்ந்தனை;
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை;
பாணி மூவுலகும் புதைய மேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தன; தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் எய்ந்தனை;
வரபுரம் என்றுணர் சிரபுரத்து உறைந்தன;
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல் கெடுத்து அருளினை; புறவம் புரிந்தனை;
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை; சண்பை அமர்ந்தனை;
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை;
எச்சன் ஏழ்இசையோன் கொச்சையை மெச்சினை;
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை;
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவுஇலா மறைஓர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே.

தெளிவுரை

ஓர் ஒரு ஆயினை   ஒரு உருவம் கொண்டாய்

தத்துவங்கள் எல்லாவற்றையும் கடந்த, வாக்கு மனம் முதலியவற்றிற்கு எட்டாத பரம்பொருள் தானே ஒரு உருவம் கொண்டு விளங்கியது.

உருவமற்றதாக, உருவங் கடந்ததாக, தத்துவங்கள் எல்லாம் கடந்ததாக இருந்த பரம்பொருளானது "சதாசிவம்" எனத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. அது "சிவம்" என்ற சொரூபம் உடையது; சிகார வகாரமாக - வியாபகமாயும் அருளோடும் கூடிய ஒரு பொருளாக விளங்கியது. இந்நிலை சுயம் பிரகாசம் எனப்பெறும். முதலில் ஒளிப்பொருளாக விளங்கிய அந்நிலையே சிவப்பிரகாசம் எனவும் கூறப்பெறும்.

ஓர்தல் - ஆராய்தல்; நாம் உணர்ந்து, உள்மனத்தில் ஆராய்ந்து பார்த்தால் நாம் விரும்பிய உருவமாகவும் விளங்கினான் எனவும் கூறப்பெறும்.

எல்லாவற்றையும் கடந்தவன்; அப்பாற்பட்டவன் என்று நம்மால் எட்டவியலா நிலை உடைய பரம்பொருளே நம்மால் எட்டப்படும் பொருளாயும் அனுபவிக்கப் பெறும் பொருளாயும் அருள் உருவம் தாங்கி முதலில் ஓர் உருவம் எடுக்கிறது. நமக்காகத் தன்னிலையில் இருந்து இறங்கிவந்து அருளால் நம்மைக் காக்க ஓர் உரு ஆயினார்.

.... மான் ஆங்காரத்து ஈர் இயல்பாய்

சத்தியும் தானுமாய் இரண்டு இயல்பாய் நின்றாய்.

ஒரு உருவமாக இறங்கி வந்த பரம்பொருளே **மான் ஆங்காரம்** என இரு நிலை கொண்ட இயல்பாக அமைந்தது.

ஒன்றனை உடைமையாகக் கொண்டவன் **"மான்"** எனப் பெறுவான். சத்தியை உடையவன் சத்திமான் என்பது போலவும் பெண்ணை உடையவன் பெண்மான் - பெம்மான் என்பது போலவுமாகும். இறைவன், **மான்** என்று கூறப்பெறும் சக்தி எனவும், சத்தியை இயக்கி அமைக்கும் நிலையில் ஆங்காரம் எனவும் இரு இயல்பானான் என்பர். ஓர் உருவங் கொண்ட இறைவனே "உடையவன் ஒருவன்" என்பதாக விளங்குகின்றான். எல்லாப் பொருளுக்கும் உடையவன் என்பதாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான்.

ஆங்காரம் - செயல் செய்ய எடுத்துக் கொள்ளும் முயற்சி. ஆம் காரம் என்பதாக, செய்யப்படும் நிலைக்கான அடிப்படையாக நின்றான் என்பது.

தானும் தன் சத்தியும் என இரண்டு இயல்பாக நின்றாய். அந்த இரண்டு இயல்பாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான்.

.... ஒருவின் முதல் தூலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து அளித்து அழிப்பமும் மூர்த்திகள் ஆயினை

ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய ஐம்பூதங்களும், சூரியன், சந்திரன் என்ற இரண்டு சுடர்களும், தேவர்களும் பிறவும் ஆகியவற்றைப் படைத்துக் காத்து அழிக்க மூன்று மூர்த்திகளாக ஆனாய்.

"ஒரு" என்பது பொருளுக்குரியதாக அடைமொழியாக அஃறிணையில் கூறப்பட்டது. சத்தியும் சத்தியை உடைய சத்திமானும் என்ற இரு தனித்தனி நிலையாக இல்லாமல் "ஒரு" நிலையில் இருப்பது. ஆற்றல் உடையது என்பதாகவோ ஆற்றல் என்பதாகவோ தனியாகவோ இல்லாமல் இரண்டும் ஒரு பொருளாக இருப்பது. தனி நிலையில் நின்ற விண் முதலான பூதங்கள் ஐந்து. பூதலம் - பூமி. பொலிவைத் தருவது; எந்த ஒன்றும் பொலிவு பெறுவதற்காக அமைந்த இடம் புவி. எனவே பூ தலம் என்றார். பூ-பொலிவு. பூமியோடு ஒன்றியிருக்கும் சூரியன் சந்திரன் மற்றும் தேவர்கள் ஏனைய பிற எல்லாவற்றையும் படைத்து, காத்து அழிக்க மும்மூர்த்தியாக ஆனான் என்பது. உம்பர்கள் உயர் திணையரேயாயினும் இங்கே அவர்தம் பதங்களை மட்டும் அச்சொல்குறித்தது. இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் என்றாற்போல.

இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை

பிரமன் இடப்பக்கத்திலும் திருமால் வலப்பக்கத்திலும் அமைய இவர்களை உள்ளடக்கி உயர்ந்த ஒருவனாக நின்றான் என்பர். இருவரின் மேலான ஒருவனாக அவன் நின்றான். சங்காரகாரணனே மேலானவன் என்று சிவஞான போத மாபாடியம் உணர்த்தும் நிலையிலும் உணரலாம்.

பிரமன் படைத்தலும் திருமால் காத்தலும் செய்ய உருத்திரனாக நின்று அழித்தலைச் செய்கிறான். அழித்தலைச் செய்பவனே படைத்தல் காத்தலைச் செய்ய முடியும். தானே முத்தொழிலை ஒருவனாகச் செய்யினும் மேலும் பிரமனாயும் திருமாலாயும் நின்றான் என்பதாகும்.

ஓர் ஆர்நிழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை

ஒப்பற்ற, பழம் பழுக்காத கல்லால் மர நிழலில், ஒளி பொருந்திய கழல் இரண்டையும் மூன்று காலத்தும் ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி காட்டினாய்.

இராமபிரான் பூசை செய்தபோது அலையின் இரைச்சலை நில் என வில்லை நிறுத்தி அடக்கினான் என்பது தனுஷ்கோடி வரலாறு. அவ்வாறு பறவை போன்ற உயிர்களால் வரும் ஒலி இடையூறு இன்றி அமைந்த அமைப்பிலான ஓர் ஆலமரம் கல்லாலமரம் எனப்பெறும். மேலும் ஆலமரம் கோடையில் தன்மையையும் குளிரில் வெம்மையையும் தருவது.

முப்பொழுது - மூன்று காலம். சந்திக்கும் காலமாகிய சந்திக்காலம் மூன்று, இரண்டு காலங்கள் சந்திக்க நடுவில் பரம்பொருள் வெளிப்படும் காலமாக, இரவும் பகலும் சந்திக்கும் காலையும்; பகல் காலத்து கதிரவன் ஏறுமுகமும் இறங்குமுகமும் சந்திக்கும் நண்பகலும்; மாலையும் இரவும் சந்திக்கும் காலமும் ஆகிய மூன்று சந்திக்காலங்கள் அமைந்துள்ளன.

ஒளி நெறியை அகத்தியர், புலத்தியர், சனகர், சனற் குமாரர் ஆகிய நால்வருக்கும் காட்டினான். சனகர் முதலானோருக்கு சின்முத்திரை காட்டியதால் சுயம் பிரகாசமாக, தன்னை ஒளிப் பொருளாக அகத்தியர் முதலானோர்க்குக் காட்டினான் என்பர். தன்னை ஒளிப் பொருளாக்கி, சிவமாய ஒளிப் பொருளுடன் கலக்கும் நெறியை ஒளி நெறியாகக் காட்டினான் என அறியலாம்.

..............நாட்டம் மூன்றாகக் கோட்டினை

கண்கள் மூன்றாகக் கொண்டு இருளை ஓட்டினாய்

இருட்டில் நாம் இருந்தபோது சூரியன் சந்திரன் அக்கினி என்ற மூன்றால் ஒளி காட்டினான்.

நமக்கு அஞ்ஞானமாகிய இருட்டானது அடிப்படையில் இருந்தது. புற இருளும் இருந்தது. இருளை விலக்கி உணருமாறு சூரியன், சந்திரன், அக்கினி என மூன்றாகக் காட்டினான்.

நாட்டம்-நாடி உணர்தல், ஒன்றை நாடித் தெரிந்து கொள்ள மூன்றாகக் காட்டினான். கண்களால் இருட்டை நீக்கிக் காண்பதாக, சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவற்றை மூன்று கண்களாகக் கொண்டு காட்டினான்.

திரிபுண்டரமாய மூன்று கோடுகள் மூலம் ஆணவம் கன்மம் மாயை ஆகிய இருட்டை நீக்கிக் காட்டினான். கோட்டினை-கோடு உடையவன்; எனவும் கொள்ளலாம்.

இருநதி அரவமோடு ஒருமதி சூடினை

பெரிய நதியாகிய கங்கையையும் பாம்பையும் ஒப்பற்ற மதியாகிய சந்திரனையும் சூடினாய்,

ஆன்மாக்களைத் தன்னுள் அழுந்தி நின்று அனுபவித்தற்கு ஆளாக்குவது அருளாகிய கங்கை நதி. அரவம் பாம்பு ஒருமதி எனப் பெறுவது ஆன்மாவாகிய சந்திரன்.

ஒருதாள் ஈர்அயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை

ஒப்பற்ற காம்புடையதும் இருபக்கக் கூர்மையானதும் மூன்று இலைகளைக் கொண்டதும் ஆகிய சூலம், நான்கு கால்கள் உடைய மான், ஐந்து தலைப்பாம்பு ஆகியவற்றை ஏந்தினாய்.

பிரணவம் என்ற ஒப்பற்ற மந்திரமே கால். எல்லா மந்திரத்தினும் உயர்ந்த வலிய மந்திரமாகிய கூர்மை ஓர்மை, நீர்மை என்பன அ.உ.ம. என மூன்றாகப் பிரிந்த மூன்று இலை ஆகிய அமைப்புடையது சூலம். அச்சூலத்தைக் கொண்டவன்.

நான்கு கால்களை உடையதாக மறித்து விளையாடும் மானைக் கையில் கொண்டுள்ளவன். தவறு செய்த காலத்து அகப்பட்ட அறியாமை நிலையாய கயமைத் தனத்தை நீக்குபவனான மானினைக் கையில் ஏந்தினான்.

வஞ்சப் புலன் ஐந்தாக நின்ற ஐந்தலைப் பாம்பை அழித்து நன்ஞானம் வழங்குவதற்காக ஐந்தலை அரவை ஏந்தினான்.

.... காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை

தன் நிழலையே கண்டு கோபம் கொள்கின்ற தன்மை உடையதும் தொங்கும் வாயினை உடையதும் மூன்று மதநீர் உடையதும் இரண்டு கொம்புகளை உடையதும் ஆகிய ஒரு யானையை ஈடழித்துத் தோல் உரித்தாய்.

தாருகவன இருடிகள் அனுப்பிய கரிய யானையானது தன்னை அனுப்பியவர்களையே கோபித்தது. முதலில் ஆனையானது தான் எண்ணி வந்த நோக்கத்தை அழித்தது என்பதே ஈடு அழித்தது. பின்னரே அதன் தோலை உரித்து அந்தத் தோலைப் போர்த்திக் கொண்டான்.

ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நால்நிலம் அஞ்சக்
கொன்று தலத்தறு அவுணரை அறுத்தனை

ஒப்பற்ற வில்லை இருவிரல் இடைவைத்து வளைத்து நிலம் அஞ்சுமாறு முப்புராதிகளோடு அவர்களுக்குத் துணையானவர்களையும் அறுத்தாய்.

வில்லினை இடதுகால் பெருவிரலுக்கும் அடுத்த விரலுக்கும் இடையில் வைத்து நாணை இழுத்து வளைத்தான். முப்புராதிகளை அழித்ததுடன் அவர்களுக்குப் புவியில் துணையாக இருந்த அவுணர்களையும் அழித்தான். அவுணர் - அறியாமையை ஆடையாகக் கொண்டிருப்பவர்.

ஐம்புலன் நால்ஆம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை

ஐம்புலன்களையும் நான்கு அந்தக் கரணங்களையும் மூன்று குணங்களையும் இரண்டு காற்றுகளையும் அடக்கிய உயர்ந்தோர் ஏத்த நின்றாய்.

ஐம்புலன் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன.
அந்தக்கரணங்கள் - மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகியன
குணங்கள் - சத்துவம் இராசதம் தாமதம் ஆகியன
வளி - பிராணன், அபானன் என்பன.
ஒருங்கிய என்பது செல்லும் நெறிக்கேற்ப அமைத்துச் செய்யும் நிலை ஆகும்.

.........ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஒர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி
வரன் முறை பயின்று எழுவான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை

நெறிக்கேற்ப அமைக்கும் இயல்புடைய மனத்தோடு இருபிறப்பு நிலை அமர்ந்து, மூன்று பொழுது வழிபாடு செய்து, நான்கு மறை ஓதி, ஐந்து வேள்வி அமைத்து, ஆறு எழுத்துகளை வழியாகக் கொண்டு அமைந்த மந்திரம் ஓதி அவ்வவ் முறைப்படிச் செய்து உயர்ந்ததனை எழுப்பி வளர்த்து செயல் செய்த பிரமனைக் காப்பாற்றினாய்.

செய்யும் நிலைக்கும் செல்லும் நெறிக்கும் ஏற்ப அமைக்கும் ஆற்றலுடைய மனத்தவர் ஒருங்கிய மனத்தவர். ஒருவன் கருவில் பிறத்தலும் ஞானத்திற்காகப் பிறத்தலும் எனப்பிறப்பு இருவகை. கருவிலிருந்து பிறத்தலும் தீட்சை மூலம் பிறத்தலும் என.

காலையில் பூசி மெழுகி முதல்நாள் நெருப்பு அணையாமல் இருப்பதில் நெய்விட்டு ஏற்றலும் பின் முறையே நான்கு காலங்களில், ஏற்றதலும் ஆகிய செயல்களை ஐவகை வேள்வி என்பர். ஓதல், ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல், ஏற்றல் ஆகிய ஐந்தைச் செயலாற்றலும் அவற்றைத் திருமறை வழி அமைத்தலும் திருமுறைவழி அமைத்தலும் ஐவகை வேள்வி என்று கொள்ளப் பெறும்.

ஆறு அங்கம் என சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், சோதிடம், கல்பம் ஆகியவற்றை அமைக்கின்றனர். ஆறு

எழுத்துக்களை முதன்மையாகக் கொண்டு அமைந்த மந்திரம் எனவும் அமைக்கலாம். இதனை விரிக்கின் பெருகும். "ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி'' என்பது திருமுருகாற்றுப்படை.

பிரமனால் வணங்கப் பெற்றதால் பிரமபுரம் எனப்பெற்றது. அருளனுபவப் பெருநிலை எனவும் கொள்ளலாம்.

அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை

வண்டுகள் ஒலி செய்யும் வேணுபுரத்தை விரும்பித் தங்கினாய்!

வேணுபுரம்-சீகாழிக்கு ஒரு பெயர். 'வேணு' என்ற மூங்கிலாய் நின்று இந்திரன் வழிபட்ட நிலையில் இப்பெயர் வந்தது என்பர். இந்திரன் மூங்கிலாக இருந்து வழிபட்ட இடம். வேணு-மூங்கில். மூங்கிலிருந்து முத்துப் பிறக்கும். மூங்கில் தானாக நெருப்பை உண்டாக்கும். மூங்கிலின் இடமாக இசை எழும். ஆன்மாக்கள் ஞானம் பெறவும் சிவாக்கினியைத் தன்னுள் எழுப்பவும் அதனால் அறநிலை அனுபவம் பெற்றுச் சிறக்கவும் அமைந்த நிலையை அளிக்க உதவுவது வேணுபுரம்.

இகலிய மைந்து உணர் புகலி

தேவர்கள் தம்முடைய இடத்தில் மாறுபட்டுப் புகுந்த இடமாகிய புகலியில் புகுந்து நின்றாய்.

இகலிய மைந்து - மாறுபட்ட வலிமை. இன்பம், துன்பம் மெய்பொய் ஆகியவை ஒன்றுடன் ஒன்று வேறுபட்டவை. எனினும் வலிமை உடையவை. அவைகளின் வலிமையை உணர்ந்து

இரண்டையும் கடந்த மேற்பொருளில் அடைக்கலம் புகுவதற்குத் துணை நிற்பது புகலி. தேவர்களும் இப்பூமியைத் தேடிப் புகலிடமாக அமையக் கூடிய வகையில் சீகாழியானது புகலியாக விளங்குகிறது.

நாம் உலகியலில் மாற்றி மாற்றி அமையும் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு இருக்கிறோம். இவைகளை மாற்றிய கடந்த அனுபவம் புகலியில் அமைகிறது.

சீகாழி வேறு இடத்தைப் புகலிடமாகக் கொள்ளாது. பிற இடங்கள் எல்லாம் சீகாழியைப் புகலிடமாகக் கொண்டு இருக்கும்.

இகல் - மாறுபாடு

பொங்கு நாற்கடல்சூழ் வெங்குரு விளங்கினை

பொங்கி, திசை முழுதும் பரவிய கடல் சூழ்ந்த வெங்குருவில் விளங்கினாய்,

வெங்குரு - சீர்காழிக்குரிய பெயர். வெங்குரு என்ற பெயர் வியாழ பகவானுக்குரியது. வியாழ பகவான் விவேகமின்மை நீங்க வழிபட்ட இடம் என்பர்.

பரணி மூவுலகும் புதைய மேல் மிதந்த தோணிபுரத்து உறைந்தனை

நீரானது மூன்று உலகம் புதையக் கொண்டபோது மேல் மிதந்த தோணிபுரமாகிய சீகாழியில் உறைந்தனை.

உலகனைத்தும் மூழ்கிய காலத்து இறைவன் இறைவியுடன் ஓம் என்ற தோணியில் வந்து புகுந்த தங்கிய இடமாதலால்

சீகாழியானது தோணியுரம் எனப்பெற்றது.

...... தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

மறைந்து போகாமல் என்றும் வளந்தரும் இருவகை நிதிகள் பொருந்திய பூந்தராய் என்னும் பதியைப் பொருந்தியிருந்தாய்.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் வந்து வழிபட்ட இடம் பூந்தராய். பூ - தாமரை; இது பதுமநிதியைக் குறித்தது தராய் - சங்கு; இது சங்கநிதியைக் குறித்தது.

வரபுரம் என்று உணர் சிரபுரத்து உறைந்தனை

மேன்மை உடைய இடம் என்று உணரப் பெறும் சிரபுரத்து உறைந்தாய்.

வரபுரம் என்பது மேன்மை உடைய இடம். இதற்கு மேலான வேறு ஒரு இடம் இல்லை என்பதாக அமைந்தது சீகாழி. சிரபுரம் சீகாழிக்குரிய பெயர். சிரத்தை உடையவனுக்கு உடம்பு இல்லாத நிலையம் புரத்தை உடையவனுக்குச் சிரம் இல்லாத நிலையும் கொண்ட இராகு கேது இருவருக்கும் அருளிய இடம் சிரம் தலை, புரம் - உடம்பு.

ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல் கெடுத்து அருளினை

ஒப்பற்ற மலையை எடுத்த இரு வலிமையுடைய இராவணனுடைய வலிமையைக் கெடுத்து அருளினாய்.

இராவணனுக்கு உரிய இயல்பான பலத்தினால் ஒரு

வலிமையும் அழுது சாதிப்பதால் ஒரு வலிமையும் அமைவதால் இரு திறல் என்றார்.

.... புறவம் புரிந்தனை

புறவம் என்ற பெயருடைய சீகாழியில் அருள்புரிந்து விளங்கினாய்.

கௌதம முனிவர் சாபத்தால் பிரஜாபதி முனிவர் புறாவாக இருந்து அவ்வடிவம் நீங்க வழிபட்ட இடம் சீகாழி எனவே சீகாழி புவம் எனப்பெற்றது.

**முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை**

கடலில் துயின்ற திருமாலும் நான்முகனும் அறிய இயலாத பண்புடையவனாய் நின்றாய்.

முன்நீர் - ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் ஆகியன கொண்ட கடல், படைத்தல், காத்தல், அழித்தல், என்ற மூன்று தன்மைகளைக் கொண்டது கடல் என்பர்.

.... சண்பை அமர்ந்தனை

சண்பை எனப்பெறும் சீகாழியை விரும்பித் தங்கியுள்ளாய்.

சண்பை மரங்கள் நிறைந்து விளங்கியதால் சீகாழி சண்பைநகர் எனப்பெற்றது.

**ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை**

சந்தேகமுறும் அமணர்களும் தேரர்களும் எந்தக் காலத்தும் உணர இயலா நிலையில் உயர்ந்த சீகாழியை விரும்பி ஏற்றாய்.

அமணர்கள் தலைமைத் தன்மையுடையவர்கள் தாமே எனக் கூறிக்கொண்டு இறுதிவரை சந்தேகப்படுபவர்களாக அமைந்தனர். தேரவாத புத்தர் அழிவதில் ஞானம் என்பர். இதனால் அறுவகை என்றார். அறுவகை - அற்றுப் போகும் நிலை.

எச்சன் ஏழ் இசையோன் கொச்சையை மெச்சினை

எச்சன் ஏழ்இசையால் வழிபட்ட கொச்சை என்ற கொச்சைவயத்தை விரும்பி அமர்ந்துள்ளாய்.

ஏழ்இசை - குரல் (மிடறு), துத்தம் (நா), கைக்கிளை (அண்ணம்), உழை (சிரம்), இளி (நெற்றி), விளரி (நெஞ்சு), தாரம் (மூக்கு), ஏழு இடங்களில் தோன்றும் ஒலிகளின் இணைப்பே இசை.

கொச்சைவயம் என்பது மச்சகந்தியை பரிமளகந்தியாக மாற்ற வழிபட்ட இடம். இது சீகாழிக்குரிய பெயராகும்.

ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை

ஆறுபதங்கள், ஐந்தாக விரும்பியறியப் பெறும் கல்வி, மறை முதலான நான்கு, மூன்று காலம் ஆகிய எல்லாவற்றிலும் வெளிப்பட நின்றாய்.

ஆறுபதங்கள் என்பது மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என ஆறு நிலைகளில்

அருள நின்ற நிலை; ஐந்தாக **சிவய நம என மந்திரமாக வெளிப்பட்ட நிலையே ஐந்தமர் கல்வி எனப்பெற்றது.** அஉம என்ற மூன்றும் நாதம் விந்து என்ற இரண்டும் இணைந்த ஒரு அமைப்பு என நான்காகத் தோன்றி அருளினான். அவன் மூன்று காலங்களையும் தோன்றுமாறு செய்து, அவைகளுன் இணைந்து வெளிப்பட நின்றான்.

இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்

இருமையாக அமைந்த இரண்டைச் சார்ந்ததும் இரண்டைக் கடந்ததும் ஆகிய ஒருமை நிலையாகவும் அதுவே தனிப் பெருமையாக நின்ற நிலையாகவும்.

"இருமையுங் கடந்து நின்றார்" என்றும் "ஒருமை வகையால் உலகை வெல்வார்' என்றும் அடியவர் நிலை பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். உலகியலில் காணப்படும் அனைத்தும் இரவு பகல், மெய், பொய், உள் வெளி, ஆண், பெண், நன்மை, தீமை என இருமையாக அறியப்படுகின்றன.

இருமையாக நம்மால் அனுபவிக்கப்படும் **மாறுபட்ட இரு அனுபவங்களைக் கடந்த அனுபவமாக ஒருமை அனுபவம் அமைதல் உண்டு.** இருமையின் நடுவில் பரம்பொருள் தோன்றும் அந்த பரம்பொருளின் பெருமையே உயர்ந்தது.

மறுவிலா மறை ஓர்

குற்றமில்லாததைத் குற்றமற்ற நிலையில் நின்று உணர்பவரே மறையோர்.

"இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்" என்பதை மந்திரமாகக் கொண்டு அதை ஆராய்ந்து கொண்டிருப்போரையே இங்குக் குறித்தார்.

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே

கழுமலம் என்பதாய சீகாழி என்ற பழம்பதிக் கவுணியன் கூறியது; கழுமல முதுபதிக் கவுணியனால் அறியப் பெறும் நின்னை இதன் மூலமே உணர இயலும்; இந்த நிலவுலகில் உள்ள வேறு எந்த வல்லமை உடையவராலும் நினைத்தலும் இயலாது.

கழுமலம் என்ற மூத்த பதியை உடைய சம்பந்தர் தம்முடைய அருளியலனுபவத்தை வரையறைப்படுத்தி உரைத்தது. இறைவனை "இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்" என்பதாகச் சம்பந்தர் அறிந்தார் என்பதும் அவ்வாறே நாமும் அறிந்து அனுபவிக்கலாம் என்பதுமாகும்.

நான் அறிந்த தன்மையிலேயே நீங்களும் அனுபவித்து அறியமுடியும். அவ்வாறில்லையாயின் வேறு எதன் மூலமும் நினைய வல்லவர் இல்லை எனத் திருஞான சம்பந்தப் பெருமான் கூறுகின்றார்

அவ்வாறு நினைப்பவர் இவ்வுலகில் இறப்பு, பிறப்பு, ஆகியவைகளில் அகப்பட்டு வருந்தமாட்டார் எனவும் கொள்ளலாம்

இப்பாடலுக்குத் தத்துவாதீத நிலையில் எழும் அருளனுபவப் பொருள் எழுதப் பெறவில்லை அனைவரும் எளிதில் உணரக் கூடிய தெளிவுரையே எழுதப்பட்டது.

பதிக அமைப்பு :

இப்பதிகத்தில் ஒன்று இரண்டு ஒன்று - ஒன்று இரண்டு, மூன்று, இரண்டு, ஒன்று - என்று இங்ஙனம் ஒன்று முதல் ஏழு முடியப் படிப்படியாக, ஒவ்வொன்றாக ஏறியும் இறங்கியும் இவ்வாறு ஏழு கூறுகளிலும் எண்கள் உள்ளன. இஃது ஏழு கூறுகளாக அமைந்திருத்தலால் ஏழு கூற்றிருக்கை எனப் பெயர் பெற்றது. இதனைச் '**சித்திரக்கவி**'களுள் ஒன்று எனக் கூறுவர். தேர் ஒன்றின் மேல் பரப்புப் போல் இஃது அமைந்து உள்ளது. இதன் அமைப்பு முறை வருமாறு.

1 2 1

1 2 3 2 1

1 2 3 4 3 2 1

1 2 3 4 5 4 3 2 1

1 2 3 4 5 6 5 4 3 2 1

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

இதன் கண் அறுபத்தொன்று அறைகள் இருப்பதைக் காணலாம். இதனைத் 'தேர்ப்பந்தம்' (இரதபந்தம்) என்பர். நமது

உடலைத் தேருக்கு ஒப்பாகக் கூறுவர். எனவே இப்பதிகத்தை அன்றாடம் படனம் செய்து வருபவருக்கு எந்தவித உடற்பிணியும் நேராது என்பது உண்மை.

பதிகச் சிறப்பு :

இப்பதிகத்தைத் திருஞான சம்பந்தப் பெருமான், இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடியருளியுள்ளார். இதில் இறைவனின் எண்ணற்ற ஆற்றல்கள் கூறப்பட்டுள்ளன. சீகாழிப் பதியின் பன்னிரு திருப்பெயர்களும் இதன்கண் இடம் பெற்றுள்ளன. இதனைப் படனம் செய்யும்போது, எல்லாம் வல்ல சிவபெருமான் நம்முன் எழுந்தருளிச் செய்து நமக்கு வழங்குவதை நாளடைவில் படனம் செய்து வரும்போது உணரலாம்.

சிவமயம்

படுக்கையிலிருந்து 'சிவாயநம' என்றோ அல்லது திருச்சிற்றம்பலம் என்றோ சொல்லி எழுதல் வேண்டும். பின் பல்துலக்கி முகம் கை கால் சுத்தம் செய்து திருநீறு அணிதல் வேண்டும். ஓரிடத்தல் அமர்ந்து இப்பாடலைப் பாடித் துதித்தல் அளவிலா நன்மையை அளிக்கும்.

"மேலை விதியே வினையின் பயனே விரவார் புரமூன்று எரிசெய்தாய்
காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைகண்டா
மாலை மதியே மலைமேல் மருந்தே மறவேன் அடியேன் வயல் சூழ்ந்த
அலைக் கழனிப் பழனக் கச்சூர் அலக் கோயில் அம்மானே".

உணவு அருந்த தொடங்கும் பொழுது

"அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே"

பூசையின் முடிவில் சொல்ல வேண்டிய பாடல்

"கல்லா பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொருந்தருள்வாய் கச்சியேகம்பனே !


உறங்குவதற்குமுன் சொல்ல வேண்டிய பாடல்

"மஞ்சனே மணியுமானாய் மரகத் திரளுமானாய்
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரு நிகழ்வினானே
துஞ்சம் போதாக வந்து துணை யெனக்காகி நின்று
அஞ்சல் என்றருள வேண்டும் ஆவடுதுறை யுளானே"

திருச்சிற்றம்பலம்

தேவாரத்திருவெழுகூற்றிருக்கை

					க ஓருருவாயினை மானாங்காரத்து	உ ஈரியல்பாய்	க ஒருவிண்முதல் பூதலம்					
				க ஒருவனாகி நின்றனை	உ இருவரோடு	உ மும்மூர்த்தி களாயினை	உ இருசுடரும்பர்கள் பிறவும்படைத்த அளித்து அழிப்ப	க ஒன்றிய				
			க ஓராலநீழலொண் கழல்	உ இரண்டும்	உ முப்பொழு தேத்திய	ச நால்வர்க்கொளி நெறிகாட்டினை நாட்டம்	உ மூன்றாகக் கோட்டினை	உ இருநதியர வமோடு	க ஒருமதி சூடினை			
		க ஒருகரிஈடழித் துரித்தனை	உ இருகோட்டு	ங மும்மதத்து	ச நால்வாய்	ரு ஐந்தலையரவ மேந்தினைகாய்ந்த	ச நாற்கால் மான்மறி	ங மூவிலைச் சூலம்	உ ஈர் அயில்	க ஒருதாள்		
	க ஒருதனு	உ இருகால்வளைய வாங்கி	ங முப்புரத்தோடு	ச நானிலம்	ரு அஞ்சக்கொன்று தலத்துறவவுணரை	சா அறுத்தனை	ரு ஐம்புலன்	ச நாலாமந்தக் கரணம்	ங முக்குணம்	உ இருவளி	க ஒருங்கியவானோ ரேத்தநின்றனை	
க ஒன்றுணர்சிரபுரத் துறைந்தனை	உ இருநிதிவாய்ந்த பூந்தராயேய்ந் தனை வரபுரம்	ங மூவுலகும்புதையமேல் மிதந்ததோணிபுரத் துறைந்தனைதொலையா	ச நாற்கடல்சூழ்வெங் குருவிளங்கினை பாணி	ரு ஐந்துணர்புகலி யமர்ந்தனை பொங்கு	சா அறுபதமுரலும் வேணுபுரம்விரும் பினையிகலிய	எ ஏழுவான்றனைவ ளர்க்கும்பிரமபுரம் பேணினை	சா ஆறங்கமுதலெழுத் தோதிவரன் முறைபயின்று	ரு ஐவகைவேள் வியமைத்து	ச நான்மறை யோதி	ங முப்பொழுது குறைமுடித்து	உ இருபிறப் போர்ந்து	க ஒருங்கிய மனத்தோடு
க ஒருமலை யெடுத்த	உ இருதிறலரக்கன் விறல்கெடுத்தருளினை புறவம்புரிந்தனை	ங முந்நீர்த்துயின் றோன்	ச நான்முகனறியாப் பண்பொடுநின்றனை சண்பையமர்ந்தனை	ரு ஐயுறும் அமணரும்	சா அறுவகைத்தேரரும் ஊழியுமுணராக்காழி யமர்ந்தனையெச்சன்	எ ஏழிசையோன் கொச்சையை மெச்சினை	சா ஆறுபதமும்	ரு ஐந்தமர்கல் வியுமறைமுதல்	ச நான்கும்	ங மூன்றுகாலமும் தோன்றநின்றனை	உ இருமையினொ ருமையும்	க ஒருமையின்பெரு மையு மறுவிலா மறையோர்
	அனையதன்மையையாதலின்னை நினையவல்லவரில்லை நீணிலத்தே		இதனை வேறுவிதமாகவும் அடைக்கலாம்							கழுமலமுதுபதிக்கவுணியன் கட்டுரை கழுமலமுதுபதிக்கவுணியனறியும்			
க ஒருமலை யெடுத்த	உ இருதிறலரக்கன் விறல்கெடுத்தருளினை புறவம்புரிந்தனை	ங முந்நீர்த்துயின் றோன்	ச நான்முகனறியாப் பண்பொடுநின்றனை சண்பையமர்ந்தனை	ரு ஐயுறும் அமணரும்	சா அறுவகைத்தேரரும் ஊழியுமுணராக்காழி யமர்ந்தனையெச்சன்	எ ஏழிசையோன் கொச்சையை மெச்சினை	சா ஆறுபதமும்	ரு ஐந்தமர்கல் வியுமறைமுதல்	ச நான்கும்	ங மூன்றுகாலமும் தோன்றநின்றனை	உ இருமையினொ ருமையும்	க ஒருமையின்பெரு மையு மறுவிலா மறையோர்
க ஒன்றுணர்சிரபுரத் துறைந்தனை	உ இருநிதிவாய்ந்த பூந்தராயேய்ந் தனை வரபுரம்	ங மூவுலகும்புதையமேல் மிதந்ததோணிபுரத் துறைந்தனைதொலையா	ச நாற்கடல்சூழ்வெங் குருவிளங்கினை பாணி	ரு ஐந்துணர்புகலி யமர்ந்தனை பொங்கு	சா அறுபதமுரலும் வேணுபுரம்விரும் பினையிகலிய	எ ஏழுவான்றனைவ ளர்க்கும்பிரமபுரம் பேணினை	சா ஆறங்கமுதலெழுத் தோதிவரன் முறைபயின்று	ரு ஐவகைவேள் வியமைத்து	ச நான்மறை யோதி	ங முப்பொழுது குறைமுடித்து	உ இருபிறப் போர்ந்து	க ஒருங்கிய மனத்தோடு
	க ஒருதனு	உ இருகால்வளைய வாங்கி	ங முப்புரத்தோடு	ச நானிலம்	ரு அஞ்சக்கொன்று தலத்துறவவுணரை	சா அறுத்தனை	ரு ஐம்புலன்	ச நாலாமந்தக் கரணம்	ங முக்குணம்	உ இருவளி	க ஒருங்கியவானோ ரேத்தநின்றனை	
		க ஒருகரிஈடழித் துரித்தனை	உ இருகோட்டு	ங மும்மதத்து	ச நால்வாய்	ரு ஐந்தலையரவ மேந்தினைகாய்ந்த	ச நாற்கால் மான்மறி	ங மூவிலைச் சூலம்	உ ஈர் அயில்	க ஒருதாள்		
			க ஓராலநீழலொண் கழல்	உ இரண்டும்	உ முப்பொழு தேத்திய	ச நால்வர்க்கொளி நெறிகாட்டினை நாட்டம்	உ மூன்றாகக் கோட்டினை	உ இருநதியர வமோடு	க ஒருமதி சூடினை			
				க ஒருவனாகி நின்றனை	உ இருவரோடு	உ மும்மூர்த்தி களாயினை	உ இருசுடரும்பர்கள் பிறவும்படைத்த அளித்து அழிப்ப	க ஒன்றிய				
					க ஓருருவாயினை மானாங்காரத்து	உ ஈரியல்பாய்	க ஒருவிண்முதல் பூதலம்					



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி மாணிக்கவாசகர்